பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 12 ஜுமாதல் ஊலா - 1433 மார்ச்- 2012

## ஒரு வருடம் கடந்து...

அன்பின் வாசக நெஞ்சங்ளே! அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹ்

ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத் மாதம் தோறும் வெளியிட்டு வரும் **வழிகாட்டி** சஞ்சிகை இவ் இதழுடன் தனது முதலாவது வருடத்தை பூர்த்திசெய்கிறது. அல்ஹம்து லில்லாஹ். அல்லாஹ்வின் உதவியும் அருளும் இல்லையென்றால் இத்தகையதொரு அடைவைப் பெற்றிருக்க முடியாது. அல்லாஹ்வின் உயர்ந்த மார்க்கம் அதன் தூய்மையான வடிவில் அனைத்து இல்லங்களுக்கும் உள்ளங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற தூய நோக்கோடும் அல்லாஹ்வின் திருப்தியையும் நற்கூலிகளையும் பெற்றிடும் உன்னத இலட்சியத்தோடும் இவ் இதழை மாதம் தோறும் வெளிக்கொணர்வதற்காக தமது பணத்தாலும் சரீரத்தாலும் அறிவாற்றலாலும் உழைத்த அத்தனை உள்ளங்களுக்கும் அல்லாஹ் தனது பேரருளை சொரிந்தருள்வானாக.

வாசக நெஞ்சங்களே! ஒரு வருடமாக நீங்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு எமது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம். இச் சஞ்சிகையை அல்லாஹ்வின் உதவியோடு மேலும் பல வருடங்கள் வெளியிடுவதற்கு உங்கள் வரவேற்பையும் ஆதரவையும் நாடி நிற்கிறோம். இவ்விதழ் குறித்த உங்கள் கருத்துகள், ஆக்கபூர்வமான விமர்சனங்களை என்றும் எதிர்பார்த்திருக்கிறோம். - பொறுப்பாசிரியர்

## தொலைக்காட்சிக்குள் தொலைந்துபோகும் இலட்சியங்கள்

இன்று அதிகமானோரின் பொழுதுகளையும் பொன்னான நேரங்களையும் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்படும் தொடர் நாடகங்களும் சினிமாப் படங்களும் விழுங்கி ஏப்பமிட்டுக்கொண்டிருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

சிறியோர், பெரியோர் என்ற வேறுபாடின்றி - முக்கியமாக பெண்கள் - தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு அடிமையாகிப் போன நிலை, இன்றைய முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரும் அவல நிலையாகும்.

இவ்வாறான நாடகங்களையும் படங்களையும் பல வருடங்களாக தவறாமல் பார்த்து வருகிறீர்களே...இதன் மூலம் நீங்கள் அடைந்த பயன்களை பட்டியலிட்டுக்காட்டுங்கள் என்று நாடக, சினிமா ரசிகர்களைக் கேட்டால் அவர்கள் விழிபிதுங்கி கைவிரிப்பதைத் தவிர வேறு எதுவும் கூறமுடியாது.

ஆனால், இவற்றின் மூலம் ஏற்படும் தீய விளைவுகளை பெரும் பட்டியலிட்டுக் காட்டுமளவுக்கு அவை அதிகம் இருக்கின்றன:

- தொழுகைகள் பாழடிக்கப்படுகின்றன.
- மோசமான காட்சிகளைப் பார்ப்பதன் மூலம் கண்கள் பாவம் செய்கின்றன.
- இசை, பாடல்கள், மோசமான, ஆபாசமான உரையாடல்களைக் கேட்பதன் மூலம் காதுகள் பாவம் செய்கின்றன.
- உள்ளத்தில் கெட்ட சிந்தனைகளும் ஆபாச உணர்வுகளும் வாழ்க்கைக்கு உதவாத அர்த்தமற்ற கற்பனைகளும் வளர்க்கப்படுகின்றன.
- இளம் வயதினரிடையே தவறான, பாவமான தொடர்புகள் ஏற்படுகின்றன.
- கொலை, கொள்ளை, கற்பழிப்பு, போதைவஸ்துப் பாவனை, பொய்கூறுதல், மோசடி செய்தல், ஏமாற்றுதல் போன்ற இன்னும் பல பாவங்கள் சமூகத்தில் அதிகரித்துச்செல்கின்றன.
- உண்மை, நேர்மை, இறையச்சம், பெரியோரை மதித்தல், பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் கட்டுப்படுதல்,

மார்க்க விடயங்களையும் த.்.வா செய்திகளையும் உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள
**f evrtj** என்று Type செய்து 40404க்கு SMS அனுப்பி வையுங்கள். இது முற்றிலும் இலவசமானது.
(Airtel & Hutch வலையமைப்புகளைத் தவிர)

வாக்குமாறாமை போன்ற பல்வேறு உயர் பண்புகள் படிப்படியாக இல்லாதொழிந்து போய்க் கொண்டிருக்கின்றன.

- மார்க்க ஈடுபாடு, வணக்க வழிபாடுகளில் ஆர்வம், சமூக உணர்வு, தியாக மனப்பான்மை என்பன பெருமளவில் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன.
- இஸ்லாத்தைப் பின்பற்றி வாழ்தல், இஸ்லாமிய பிரசார செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பன பிற்போக்குத் தனமானவையாகவும் நாகரிகமற்றவையாகவும் நோக்கப்படுகிறது.
- மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்படுகிறது.
- பெறுமதியான நேரம் வீணடிக்கப்படுகிறது.

அனைத்துக்கும் மேலாக சிறந்த பண்பாடுகளையும் நாகரிகத்தையும் அழகிய வாழ்க்கை முறையையும் காட்டித்தந்த நபிகளாரும் ஸஹாபாக்களும் பின்தள்ளப்பட்டு, விபசாரம், போதைவஸ்துப் பாவனை, களவு, மோசடி ஆகியவற்றிலேயே காலத்தைக் கடத்துகின்ற நடிகர்களும் நடிகையரும் கூத்தாடிகளும் இன்றைய இளைஞர்களினதும் யுவதிகளினதும் முன்மாதிரிகளாக (Role model) மாறிப் போய் இருக்கிறார்கள். வருங்காலத் தலைவர்களாக மிளிரவிருக்கின்ற இளைஞர், யுவதிகள் நடிகர், நடிகையரைப் பின்பற்றி ஆடை அணிவதில் அதிக அக்கறை செலுத்துகிறார்கள். நடிகர், நடிகையரைப் போன்று சிகையலங்காரம் செய்யவும் தமது அன்றாட செயற்பாடுகளை வடிவமைத்துக்கொள்ளவும் தலைப்பட்டிருக்கிறார்கள் எனின், இதை விட வேறு என்ன கைசேதம் இருக்க முடியும்? பெற்றோர் இவற்றைக் கண்டும் காணாதவாறு விட்டுவிடுகிறார்கள். மற்றும் சிலரோ தமது பிள்ளைகள் நடிகர், நடிகையரைப் பின்பற்றுவதைப் பெருமையாகவும் கௌரவமாகவும் கருதிக்கொள்கிறார்கள்!! மரணத்தின் பின்னுள்ள வாழ்க்கையையும் அல்லாஹ்வின் விசாரணையையும் மறந்துவிட்டார்களா இவர்கள்?

முன்பொரு காலத்தில் மஃரிப் தொழுகையின் பின் பெரியோரும் சிறியோரும் அல்குர்ஆனை ஓதும் வழக்கம் இருந்தது. வீதிகளில் செல்லும் போது பல வீடுகளில் அல்குர்ஆன் ஓதும் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கும். பெண்கள் மஃரிப் தொழுதுவிட்டு இஷா தொழுகைக்கான அதான் ஒலிக்கும் வரை அதே இடத்தில் அமர்ந்து அல்குர்ஆன் ஓதல், தஸ்பீஹ் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருப்பார்கள். எப்போது தொலைக்காட்சித் தொடர்களுக்கும் சினிமாவுக்கும் மக்கள் அடிமையாகிப் போனார்களோ அப்போதிலிருந்து குர்ஆன் ஓதுதல், தொழுகை, தஸ்பீஹ் என்பன வெறும் சடங்காக மாறிப்போய் விட்டன. சடங்குக்காக மாத்திரம் பிள்ளைகள் அல்குர்ஆனை புரட்டி ஒரு சில வரிகளை ஓதிவிட்டு தொலைக்காட்சியின் முன் அமர்ந்து விடுகிறார்கள். வீட்டிலுள்ள பெண்களும் பிள்ளைகள் சில வரிகளையாவது ஓதும் வரைக்கும் காத்திருந்து விட்டு இரண்டொரு நிமிடங்களில் ஓதி முடித்ததும் தமது பிள்ளைகளுக்கு தாமே தொலைக்காட்சியை திறந்து கொடுத்து தாமும் பிள்ளைகளோடு சேர்ந்து நாடகங்களில் லயித்துப் போய் விடுகிறார்கள்.

அதிகமான பெண்கள் சடங்குக்காக அஸர், மஃரிப், இஷா தொழுகைகளை மிக வேகமாக நிறைவேற்றிவிட்டு நாடகங்களிலும் படங்களிலும் மூழ்கிப் போய் விடுகிறார்கள். பல பெண்கள் தொடர்கள் முடியும் வரை தம் மீது கடமையான தொழுகைகளைத் தள்ளிப்போடுகிறார்கள், இன்னும் பல பெண்களுக்கு தொழுகையே கிடையாது. தொடர்கள் ஒளிபரப்பாகும் நேரத்தில் பிள்ளைகள் அழுதால் கூட பலருக்கு சகிக்க முடிவதில்லை. அல்லாஹ்வின் கடமைகளிலோ, பிள்ளைகளிலோ இல்லாத அத்தனை இன்பம் இவர்களுக்கு இத்தொடர்களில்... ஆண்களிலும் பலர் இதே நிலையிலிருக்கிறார்கள்.

வீதிகளில் செல்லும் போதெல்லாம் தொலைக்காட்சி இரைவதையும் பாடல்கள் ஒலிப்பதையுமே அதிகம் கேட்க முடிகிறது. இன்னும் பலரோ பிறருக்கு கேட்காதவாறு உள்வீட்டினுள் தொலைக்காட்சியை வைத்து இரகசியமாக பார்த்துக்கொள்கிறார்கள். அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பதை வசதியாக மறந்து விடுகிறார்கள். எவ்வளவு பெரிய ஆபத்து இந்த சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கிறது!

செய்தி மற்றும் அறிவுசார் நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டாலும் அவற்றுக்காக மட்டும் தொலைக்காட்சியை பயன்படுத்தி விட்டு ஏனைய நேரங்களில் அதை நிறுத்திவைக்கும் மனிதர்கள் எம்மில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

மலக்குகள் பிரசன்னமாகியிருக்க வேண்டிய அருமையான நேரங்களில் தொலைக்காட்சியைத் திறந்து ஷைத்தான்களை வரவேற்று உள்வீட்டினுள் வைத்திருக்கிறார்கள். அத்தனை அசிங்கங்களும் நடுவீட்டினுள் அரங்கேறும் போது மலக்குகள் எவ்வாறு வீடுகளுக்குள் வருவார்கள்? அல்லாஹ்வின் அருளும் பறகத்தும் எவ்வாறு வீடுகளை ஆட்கொள்ள முடியும்?

மலக்குகளின் வருகையும் அல்லாஹ்வின் அருளும் நமது வீடுகளுக்குள் நிறைந்திருக்க வேண்டுமாயின் அசிங்கங்களும் ஆபாசங்களும் வரட்டுக் கற்பனைகளும் பொய்களும் நிறைந்த நாடகங்களும் படங்களும் இல்லாத வீடுகளாக நமது வீடுகள் மாற வேண்டும். அத்தகைய வீடுகளை உருவாக்க அனைவரும் முயற்சிப்போமாக. அல்லாஹ் நமக்கு அருள்புரிவானாக.

## ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

- தொடர் 04

**(தொடர் 03ல் ஸப்புகளில் நிற்கும் முறை, நிய்யத் ஆகியன பற்றி கலந்துரையாடப்பட்டது)**

**5) ஆரம்பத் தக்பீர் கூறி கைகளை உயர்த்துதல்**

* நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மூன்று விதமாக அல்லாஹுஅக்பர் என்று தக்பீர் சொல்வார்கள் :

I- (சில வேளைகளில்) அல்லாஹுஅக்பர் என்று சொல்லிக் கொண்டே கைகளை உயர்த்துவார்கள். (அபூதாவூத் , இப்னு குஸைமா)

II- (சில நேரங்களில்) அல்லாஹுஅக்பர் என்று சொல்லி முடித்த பின் கைகளை உயர்த்துவார்கள். (புஹாரி , நஸாஈ)


III – (மற்றும் சில நேரங்களில்) அல்லாஹுஅக்பர் என்று சொல்வதற்கு முன் கைகளை உயர்த்துவார்கள். (புஹாரி , அபூதாவூத்)

* அவ்வாறே நபியவர்கள் மூன்று முறைகளில் கைகளை உயர்த்துவார்கள்.

I- (சில நேரங்களில்) இரு கைகளின் பெருவிரல்களும் காதுச் சோணைக்கு நெருக்கமாக இருக்குமளவுக்கு கைகளை உயர்த்துவார்கள். (நஸாஈ)

II- (சில நேரங்களில்) இரு கைகளும் காதின் நுனிகளுக்கு நேராக இருக்குமளவுக்கு கைகளை உயர்த்துவார்கள். (புஹாரி, அபூதாவூத்)

III – (மற்றும் சில நேரங்களில்) இரு கைகளும் இரு தோற்புயங்களுக்கு நேராக இருக்கத்தக்கவாறு கைகளை உயர்த்துவார்கள். (புஹாரி, நஸாஈ)



* கைகளை உயர்த்தும் போது விரல்களை பொத்தாமலும், மடக்காமலும் நீட்டி வைத்திருக்க வேண்டும்.
நபியவர்கள் இரு கை விரல்களும் நீட்டப்பட்ட நிலையில் கைகளை உயர்த்துவார்கள். (அபூதாவூத், இப்னு குஸைமா)

* மேற்கூறப்பட்ட முறைகளுக்கு மாற்றமாக,
- தக்பீர் சொல்லும் போது இரு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்துதல்
- கைகளை ஒழுங்காக உயர்த்தாமல் அரைகுறையாக நெஞ்சு வரைக்கும் உயர்த்துதல்
- வந்த அதே வேகத்தில் கைகளை அறவே உயர்த்தாமல் கைகளைக் கட்டிக்கொள்ளுதல் ஆகிய அனைத்தும் பிழையானவையாகும், நபிவழிக்கு முரணானவையாகும். எனவே ஆரம்பத் தக்பீர் கூறி கைகளை உயர்த்தும் போது நபியவர்கள் செய்த மூன்று முறைகளில் ஒரு முறையை பின்பற்றி கைகளை உயர்த்துவது அவசியமாகும்.

**6) இடது கைக்கு மேலே வலது கை இருக்கத்தக்கதாக இரு கைகளையும் நெஞ்சின் மீது வைத்தல்.**

* நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தமது இடது கைக்கு மேலே வலது கையை வைப்பார்கள். (முஸ்லிம், அபூதாவூத்)

* நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் தமது இரு கைகளையும் நெஞ்சின் மீது வைப்பார்கள். (அபூதாவூத், முஸ்னத் அஹ்மத், இப்னு குஸைமா)

நெஞ்சின் மீது கைகளை வைத்தார்கள் என்பதைக் குறிக்கும் 'அலஸ் ஸத்ர்' என்ற அறபு வாசகம் ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளது. இதன் நேரடி அர்த்தம் 'நெஞ்சின் மீது' என்பதே ஆகும். ஆயினும் ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த சில அறிஞர்கள் இதை 'நெஞ்சுக்கு கீழே' என்று வலிந்து அர்த்தம் கொடுத்திருக்கிறார்கள். இதை ஆதாரமாகக் கொண்டே பலர் நெஞ்சுக்குக் கீழே வயிற்றின் மீது கைகளைக் கட்டுகிறார்கள். ஆயினும் இவ்வாறு அர்த்தம் கொடுப்பதற்கு மொழி ரீதியாக எந்த வகையிலும் சாத்தியமில்லை. ஹதீஸிலே இடம்பெறுகின்ற 'அலா' என்ற சொல்லுக்கு 'மீது', 'மேலே' என்பதே அர்த்தமாகும். 'நெஞ்சுக்கு கீழே' என்பதற்கு அறபு மொழியில் 'தஹ்தஸ் ஸத்ர்' என்ற சொல்லே பாவிக்கப்படும். அத்தகைய சொல் ஹதீஸ்களில் இடம்பெறவில்லை என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

அதே நேரம் ஒரு சிலர் கைகளை மிகக் கடுமையாக உயர்த்தி கழுத்தைத் தொடும் அளவுக்கு வைத்துக்கொள்கிறார்கள். இதுவும் பிழையானதாகும். எனவே, தக்பீரின் போது ஆண்களாயினும் பெண்களாயினும் இரு கைகளும் நெஞ்சின் மீது இருக்கத்தக்கதாக வைத்துக்கொள்வதே நபிகளாரின் வழிமுறையாகும்.

இதே வேளை சில அறிஞர்கள் தொப்புளுக்கு கீழே கைகளை வைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸை சுட்டிக்காட்டுகிறார்கள்: அலி றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் இரு கைகளையும் தொப்புளுக்குக் கீழே வைத்து தொழுது விட்டு 'இதுவே நபியவர்களின் நடைமுறை' என்று கூறினார்கள் (அபூதாவூத், அஹ்மத், பைஹகீ). இது ஆதாரபூர்வமான ஹதீஸ் என்றால் இதை நடைமுறைப்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் அப்துர் ரஹ்மான் இப்னு இஸ்ஹாக் என்பவர் பலவீனமானவர் என்பதாக இந்த ஹதீஸைப் பதிவு செய்த இமாம் அபூதாவூத், ஹாபிழ் இப்னு ஹஜர், ஹாபிழ் தஹபி போன்றோர் குறிப்பிடுகின்றனர். முக்கியமாக ஷாபிஈ மத்ஹபின் பிரதான இமாமாகிய நவவி (றஹிமஹுல்லாஹ்) அவர்களும் தனது 'அல்மஜ்மூஃ' என்ற நூலில் இந்த ஹதீஸ் பலவீனமானது என்று குறிப்பிடுகிறார்கள். எனவே, தொப்புளுக்குக் கீழே கைகளை கட்டி தொழுவது ஆதாரமற்றது என்பது தெளிவாகிறது.

அதே நேரம் சிலர் கைகளை எங்கு வைத்தாலும் பரவாயில்லை, எப்படியாவது தொழுதால் சரி என்று மிகச் சாதாரணமாகவும் அலட்சியமாகவும் கூறித் தப்பி விடுகிறார்கள். அவ்வாறெனில் நபியவர்கள் ஏன் இந்த சமூகத்திற்கு தொழுகின்ற முறைகளை அனைவருக்கும் தெரியும் விதமாக கற்றுக்கொடுக்க வேண்டும்? நபிகளாரை அனைத்து விடயங்களிலும் நமது வழிகாட்டியாக கொள்ளவேண்டும் என்பதன் அர்த்தம்தான் என்ன? நபியவர்கள் தனது தொழுகையைப் பார்த்து மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக மதீனாப் பள்ளிவாசலின் மிம்பரில் ஏறி நின்றும் தொழுதுகாட்டியிருக்கிறார்கள். 'நான் எவ்வாறு தொழ நீங்கள் கண்டீர்களோ அவ்வாறே தொழுது கொள்ளுங்கள்' என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்கள் (புஹாரி). ஸஹாபாக்கள் நபிகளார் தொழும் போது அவர்களது அங்க அசைவுகளை மிக நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருந்து விட்டு தமக்குப் பின்வரும் சமூகத்திற்காக தொழுகை சம்மந்தமான பல நூற்றுக்கணக்கான ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார்கள். பின்னால் தோன்றிய இமாம்கள் அத்தனை ஹதீஸ்களையும் மிகச் சிரமப்பட்டு சேகரித்து நமக்காக அவற்றை தமது நூல்களில் தொகுத்து வைத்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் ஒரேயடியாக புறந்தள்ளி விட்டு கைகளை எங்கு கட்டினாலும் பரவாயில்லை, எப்படியாவது தொழுதால் சரி என்று கூறுவது எத்தனை பெரிய கொடுமை?

# இஸ்லாத்தைத் தழுவிய ஓர் அமெரிக்கப் பேராசிரியரின் உணர்ச்சிகரமான முதல் தொழுகை அனுபவம்

கடந்த இதழின் தொடர்ச்சி

(அமெரிக்காவிலுள்ள மிகப்பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றான University of Kansaas ன் கணிதப் பேராசிரியரான ஜெ.்.ப்ரி லேங் இஸ்லாத்தைத் தழுவியதும் தான் தொழுத முதல் தொழுகை அனுபவம் பற்றி உணர்ச்சிபூர்வமாக விபரிக்கும் தொடர். இதன் முதற் பகுதி கடந்த இதழில் பிரசுரமாகியிருந்தது.)

ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தேன். யாருமே இல்லை. கூடம் வெறிச்சோடியிருந்தது. ஜன்னல் கதவுகளை அழுத்தமாக மூடினேன். மீண்டும் அறை நடுவே வந்து நின்றுவிட்டேன். மீண்டும் இறைவனை தொழ ஆரம்பித்தேன். கைகளை உயர்த்தினேன். பெரு விரல்களை காது நுனிவரை உயர்த்தி உரக்க சொன்னேன் ''அல்லாஹுஅக்பர்''

பிறகு மிக மெல்லிய குரலில் அல்குர்ஆனின் முதல் அத்தியாயத்தை ஓத ஆரம்பித்தேன். அன்று இரவு அறபி எவராவது எனது உச்சரிப்பைக் கேட்டிருந்தால் அவருக்கு ஒன்றுமே புரிந்திருக்காது. என்றாலும் ஒவ்வொரு வார்த்தையை உச்சரிக்கும்போதும் நான் என்னை மறந்தேன்.

இறைவனின் வார்த்தைகள்...! அவனைத் தொழுவதற்காக அவற்றை உச்சரிக்கிறேன்...! அந்த நினைப்பே என்னைச் சிலிர்க்க வைத்தது. பிறகு 'அல்லாஹுஅக்பர்' என்று கூறி குனிந்து முழங்கால்களை உள்ளங்கைகளால் பற்றிக் கொண்டேன். இப்படி என் வாழ்வில் எப்போதுமே குனிந்தது கிடையாது. இனம்புரியாத உணர்வு உடல் முழுவதும் அலையலையாய் பரவியது. நான் குனிந்த நிலையிலேயே திரும்பத் திரும்பச் சொன்னேன். ''ஸுப்ஹான ரப்பியல் அளீம்'' - 'மகத்தான எனது இறைவன் தூய்மையானவன்'. பிறகு நிமிர்ந்து நேராக நின்றேன். 'ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதஹ் - 'தன்னைப் புகழ்வதை இறைவன் கேட்டுக்கொண்டான்' பிறகு 'றப்பனா லகல் ஹம்து' - 'இறைவனே! புகழனைத்தும் உனக்கே!' என்று சொன்னேன்.

பிறகு 'அல்லாஹுஅக்பர்' சொன்னதும் ஒரு விந்தையான சோதனையில் சிக்கிவிட்டேன். ஏதோ ஒன்று என் மனதை அழுத்தியது. நெஞ்சம் பாரமாக இருந்தது. இப்போது இறைவன் முன்னால் நான் சிரம் தாழ்த்த வேண்டியிருந்தது. ஸஜ்தா செய்ய வேண்டியிருந்தது. நான் தரையைப் பார்த்தேன். எனது முகத்தை தரையில் பதிக்க வேண்டிய கட்டம் அது!

ஆனால், அதை செய்ய முடியாதே...! என்னால் அதனை எண்ணிப்பார்க்கவும் முடியாது. தரையில் எனது முகத்தை வைக்க முடியாது. தரையில் எனது முகம் தொடும் அவமானம் எனது வாழ்வில் எப்போதும் நிகழ்ந்தது கிடையாது. எஜமான் முன்பு சிரம் தாழ்த்தும் அடிமை நிலை எனக்கு வேண்டாம். இதை என்றுமே என்னால் செய்ய முடியாது. மனதில் பற்பல எண்ணங்கள் அலைமோதின.

எனது கால்கள் பாறைகளாகிவிட்டன. ஏதோ கீழே சிரம் தாழ்த்துவதிலிருந்து என்னைத் தடுப்பது போல கால்கள் இறுகிவிட்டன. வெட்கம் என்னைப் பிடுங்கித்தின்றது. அவமான உணர்வு நெஞ்சம் முழுவதும் வியாபித்திருந்தது. நண்பர்களின் சிரிப்பலைகள் எனது உள்ளத்தில் எடிரொலித்தன. மக்கள் என்னைப் பார்க்கிறார்கள். அடிமை போன்று விழுந்துகிடக்கும் நிலையைப் பார்த்து புருவங்களை உயர்த்துகிறார்கள். ஸான் .்.பிரான்ஸிஸ்கோவில் இருந்து கொண்டு முஸ்லிமாகி விட்டிருக்கிறான் - இந்த ரீதியில் பற்பல எண்ணங்கள் என் மனதை வதைத்தெடுக்க என் கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

'உதவி! உதவி! என் இறைவனே! என்னைப் படைத்தவனே! இந்த எளியவனுக்கு உதவி செய், இறைவனே!' நான் திரும்பத் திரும்ப இறைவனிடம் மன்றாடினேன். உடலை ஒருங்கிணைத்து நின்றேன். மீண்டும் நீண்டதொரு பெருமூச்சு விட்டேன். பிறகு தரையில் விழுந்தேன். முதலில் கைகள், முழங்கால்களில் ஊன்றினேன். கடைசியில்... முகத்தைத் தரையில் வைத்துவிட்டேன். ஒருமுகப்பட்டு சொன்னேன், 'ஸுப்ஹான ரப்பியல் அ.்.லா' - 'மேன்மையான எனது இறைவன் மிகவும் தூயவன்'. இன்று எப்படியும் தொழுகையை முழுமையாக நிறைவேற்றியே தீர்வது என்ற உறுதி எனக்குள் எழுந்தது.

'அல்லாஹுஅக்பர்' என்று உரத்துச் சொல்லிக் கொண்டே மறுபடியும் எழுந்து நேராக நின்றேன். 'இன்னும் மூன்று சுற்று மீதம் இருக்கிறது' எனக்குள் சொல்லிக்கொண்டேன். தொழுகையின் மீதி ரக்அத்துகளை அதே மனப் போராட்டத்துக்கிடையில் நிறைவேற்றினேன்.

எனது உணர்வுகளோடு, எனது அகந்தையோடு, ஈகோவுடன் நான் மோத வேண்டியிருந்தது. ஆனால், ஒவ்வொரு ரக்அத் முடிந்ததும் நிலைமை இலேசாகிக் கொண்டே போனது. கடைசி ரக்அத்தை மிகவும் மன நிம்மதியுடன் நிறைவேற்றினேன்.

கடைசியில் தரையில் அமர்ந்து இறைவனின் புகழ்பாடும் தஷஹ்ஹுத் (அத்தஹிய்யாத்) ஓதினேன். 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்' - 'உங்கள் மீது இறைவனின் சாந்தியும் சமாதானமும், இறைவனின் அருட்கொடையும் நிலவட்டுமாக' என்று உரத்துக் கூறியவண்ணம் வலது பக்கமும் இடது பக்கமும் ஸலாம் சொன்னேன். தொழுகையை நிறைவு செய்தேன்.

பிறகு அதே நிலையில் அமர்ந்து எனக்குள் நிகழ்ந்த மனப்போராட்டங்களை அசை போட்டுக் கொண்டிருந்தேன். தொழுகையை நிறைவேற்றுவதில் இந்தளவுக்கு தயக்கமும் போராட்டமுமா? மிகவும் வருந்தினேன். இறைவனிடம் மன்றாடினேன். 'என் இறைவனே! என்னைப்படைத்தவனே! என் அலட்சியம், எனது முட்டாள்தனம் மற்றும் அறியாமைக்காக என்னை மன்னித்தருள்வாயாக! நான் வெகுதூரத்திலிருந்து வந்திருக்கிறேன். இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டியுள்ளது!'

அதே கணம் -
திடீரென்று ஒரு அற்புத சுகத்தை உணர்ந்தேன். இதற்கு முன்னால் அப்படிப்பட்ட சுகத்தை நானுணர்ந்தது கிடையாது. அது மிகவும் விந்தையான அனுபவம். மனம் இலேசாகிவிட்டது. ஒருவித குளிர்மை இதயத்தை நிறைத்தது. அந்த அனுபவத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை. எனது கவலைகள், ஐயங்கள், சஞ்சலங்கள் எல்லாமே கரைந்து போயின. இறைவனின் பேரருள் என்னுள் புகுவதாகவும் எனக்கு நிம்மதி அளிப்பதாகவும் உணர்ந்தேன்.

பிறகு நான் அழ ஆரம்பித்துவிட்டேன். கண்ணீர் பெருக்கெடுத்து கன்னங்களை நனைத்தது. அழுகைக்கு என்ன காரணம்? என்னால் சரியாக சொல்ல முடியவில்லை. அந்த கண்ணீர்த்துளிகள் குற்ற உணர்வு மிகைத்ததால் துளிர்த்தவை அல்ல. வெட்கத்தினாலோ, பெருமகிழ்ச்சியாலோ, பேருவகையாலோ வந்தவை அல்ல. எனக்குள் ஒரு அணை பிளந்து சிதறுவதாகவும் அதில் தேக்கி வைத்திருந்த பயம், கோபம், கர்வம் போன்ற உணர்வுக் கழிவுகள் மிக வேகமாக வெளியேறுவதாகவும் நான் உணர்ந்தேன்.

இந்த அனுபவம் மிகவும் விந்தையானதாக, வியப்புக்குரியதாக இருந்தது. அறிவுப்பூர்வமாக அதனை விளக்குவது கடினமே. ஒன்று மட்டும் எனக்குத் தெளிவாக விளங்கியது. எனக்கு இறைவனும் தொழுகையும் மிக மிக அவசியமாகத் தேவை.

எழுதுவதற்கு முன்பு கடைசியாக கருணையாளனிடம் மன்றாடினேன். ‘மகத்தான இறைவனே! என் அதிபதியே! மீண்டும் நாத்திகப் பாதையில் நான் செல்ல முனைந்தால் என்னை அழித்துவிடு! மகத்தானவனே! நிகரில்லா அன்புடையோனே! நிகரில்லா அன்புடையோனே! அந்தக் கணமே எனக்கு மரணத்தைத் தந்துவிடு. குறைபாடுகளுடனும், பலவீனங்களுடனும் கூட வாழ்ந்துவிடலாம். ஆனால், உன்னை நிராகரித்த நிலையில் ஒரு நாளும் என்னால் உயிர்வாழ முடியாது.

---

# இறுதிப் பயணம் மறுமை - 04

-அஷ்ஷெய்க் MIM. வபா (கபூரி)

8. மையித்தை குளிப்பாட்டுவதற்காக தேவையான பொருட்கள் மிகப்பரிசுத்தமான தண்ணீர், இலந்தை இலை, கற்பூரம் போன்றவையே. தவிர ஆற்றுநீர், கடல்நீர் தேவையில்லை. ஆற்றுநீர், கடல்நீர் என்பவற்றால் மையித்தை குளிப்பாட்டியதற்கு குர்ஆன், ஹதீஸில் ஆதாரங்கள் இல்லை. ஒரு ஹதீஸில் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் இலந்தை இலை, தண்ணீர் ஆகியவற்றைக் கொண்டு குளிப்பாட்டுங்கள் என்று கூறியுள்ளார்கள். குளிப்பாட்டும் போது மூன்று தடவை அல்லது 5 தடவை அல்லது 7 தடவை அல்லது அதைவிட அதிகம் ஒற்றைப்படையாக குளிப்பாட்டுமாறு நபியவர்களின் மகளார் ஸைனப் ரழியல்லாஹுஅன்ஹா அவர்களின் ஜனாஸாவை குளிப்பாட்டும் போது கூறினார்கள் (புகாரி, முஸ்லிம்). குளிப்பாட்டுபவர் கையில் ஒருசிறு சீலைத்துண்டை சுற்றிக்கொண்டும் மையித் அணிந்திருந்த ஆடைகளை நீக்கிவிட்டு மையித்தின் உடலை போர்த்திக்கொண்டு குளிப்பாட்டவேண்டும். குளிப்பாட்டும் போது வலது பக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். மரணித்தவர் பெண்ணாயின் முடியை அல்லது கூந்தலை கலைத்து விட்டு குளிப்பாட்ட வேண்டும். இவ்வாறேதான் நபிகளாரின் காலத்திலே நடைமுறை இருந்துவந்தது.

9- மையித்தை குளிப்பாட்டுவதற்காக பொறுப்பேற்பவர் ஜனாஸாவில் காணப்படும் குறைகளை மறைக்க வேண்டும். அவரிலுள்ள வெறுக்கத்தக்க விடயங்களை வெளியில் சொல்லக்கூடாது. றஸுலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றார்கள்: எவரொருவர் ஒரு மையித்தை குளிப்பாட்டுவாரோ அவர் அதன் குறைகளை மறைப்பாரென்றால் அவருக்கு அல்லாஹ் நாற்பது தடவை மன்னிக்கின்றான் (ஹாகிம்). மேலும் குளிப்பாட்டுபவர் கூலியை, நன்றியை எதிர்பார்த்தல் கூடாது. அல்லாஹ்வுக்காகவே செய்ய வேண்டும். எனவே குளிப்பாட்டுவதற்கோ, ஏனைய வேலைகளுக்கோ கூலியாட்கள் தேவையில்லை. மையித்தின் உறவினர்கள் குளிப்பாட்டலாம். அதாவது தந்தையை தந்தையின் தந்தையும் மகனும், அவரின் சகோதரன், சகோதரனின் மகன் போன்றோரும் குளிப்பாட்டலாம். இவர்கள் யாரும் இல்லையாயின் முஸ்லிமான எந்த ஒரு ஆணும் குளிப்பாட்டலாம்.

10- மையித் பெண்ணாயின் பெண்களே குளிப்பாட்டவேண்டும். தாய், தாயின் தாய், மகள், மகளின் மகள் போன்ற மிக நெருங்கிய உறவு முறையான பெண்கள் குளிப்பாட்டலாம். அதே நேரம் ஜனாஸா ஆணாயின் அவரது மனைவியும், ஜனாஸா பெண்ணாயின் அவரது கணவனும் குளிப்பாட்டலாம் என ஹதீஸ்கள் குறிப்பிடுகின்றன.

11- மையித்தை பார்வையிடும் விடையத்தைப் பொறுத்தவரை ஒரு பெண் உயிரோடுள்ள ஆண்களில் யார் யாரை பார்க்க அனுமதியோ அவர்களை மாத்திரமே மரணித்த பின்பும் பார்க்கலாம். இதுபோலவே ஆண் உயிரோடுள்ள பெண்களில் யார்யாரைப் பார்க்க முடியுமோ அவர்களை மாத்திரமே மரணித்த பின்பும் பார்க்கமுடியும். தற்போது என்ன நடக்கின்றது? எல்லா ஆண்களையும் எல்லா பெண்களும் எல்லா பெண்களையும் எல்லா ஆண்களும் பார்க்கிறார்கள். இது தவிர்க்கப்பட வேண்டிய ஒரு தவறாகும்.

12- மையித்தை பார்வையிட செல்லும் பெண்கள் மையித்தை அடக்கம் செய்ய எடுத்துச் சென்று அடக்கம் செய்துவிட்டு திரும்பி வரும்வரை மையித் வீட்டிலேயே இருந்து கொண்டிருப்பர். இதுவும் தவிர்க்கப்பட வேண்டிய ஒரு தவறாகும். இதனால் அவ்வீட்டாருக்கு பெரும் சங்கடங்கள் உண்டாகும். வெளியில் சொல்ல முடியாமல் சிரமப்படுவார்கள். ஆகவே இது தவிர்க்கப்படவேண்டும். ஆறுதல் கூறிவிட்டு தத்தமது வீடுகளுக்கு சென்று விடுவதால் வீட்டாருக்கும் வருவோருக்கும் உதவியாக இருக்கும்.

13- குளிப்பாட்டுகின்ற போது நடைபெறும் சில தவறுகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். குளிப்பாட்டுபவர் வுழு செய்து கொள்ள வேண்டுமென சிலர் கூறுகின்றனர். இதற்கு குர்ஆன், ஹதீஸிலோ, ஷாபிஈ மத்ஹப் நூல்களிலோ ஆதாரம் கிடையாது. மேலும் மையித்தை குளிப்பாட்ட முன் மையித்திற்கு வுழு செய்வித்துத்தான் மையித்தை குளிப்பாட்ட வேண்டுமென்றும் சிலர் கூறுவர். இதற்கும் குர்ஆன் ஹதீஸிலோ ஷாபிஈ பிக்ஹுகிதாபுகளிலோ ஆதாரம் கிடையாது. மேலும் குளிப்பாட்டுகின்றபோது கலிமதுஷ் ஷஹாதா சொல்லி குளிப்பாட்டுகின்றனர். இதற்கும் எவ்விதமான ஆதாரமும் கிடையவே கிடையாது. குளிப்பாட்டியவர் குளித்துக்கொள்ளவும், சுமந்து சென்றவர் வுழு செய்துகொள்ளவும் என ஹதீஸில் வந்துள்ளது (அபூதாவூத், திர்மிதி). இதனைத்தவிர வேறு எதுவும் காணப்படவில்லை

- இன்ஷா அல்லாஹ் தொடரும்...

## மாதம் ஒரு துஆ

**கடனிலிருந்து நீங்க...**

اللَّهُمَّ اكْفِنِي بِحَلَالِكَ عَنْ حَرَامِكَ ، وَأَغْنِنِي بِفَضْلِكَ عَمَّنْ سِوَاكَ

**அல்லாஹு^ம்மக்பினீ பிஹலாலிக அன் ஹறாமிக வஅக்னினீ பி(ட)ப(கு)ழ்லிக அம்மன் ஸிவாக.**

**பொருள்:** யாஅல்லாஹ்! நீ ஹறாமாக்கியதை விட்டும் நீ ஹலாலாக்கியதைக் கொண்டு எனக்கு போதுமாக்குவாயாக. உனது அருளைக் கொண்டு உன்னைத் தவிரவுள்ள அனைத்தை விட்டும் என்னைத் தேவையற்றதாக்கி விடுவாயாக. (கடனை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன் மேலுள்ள துஆவை ஓதினால், மலை போன்ற அளவுக்கு கடன் இருந்தாலும் அதை அல்லாஹ் நிறைவேற்றுகின்ற வாய்ப்பை ஏற்படுத்துவான் - ஆதாரம் : திர்மிதி)

# ஐயமும் தெளிவும்

**ஐயம் 1** : நபியவர்கள் எவ்வகையில் அல்லாஹ்விடம் துஆ கேட்டார்கள்? கூட்டாக அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிய மார்க்கத்தில் ஆதாரங்கள் உண்டா?
**- MUM. றிஷாத், ஏறாவூர் 01**

**ஐயம் 2** : பொதுவாக தொழுகைக்கு பின்னால் கூட்டு துஆ ஓதுவது பித்அத் என்று அறிந்திருக்கிறேன். அதே வேளை ஏனைய இடங்களிலும் கூட்டு துஆ ஓதுவது கூடாதா? - **M.**ஸனூஸ், ஏறாவூர்

**தெளிவு** : இரு கேள்விகளும் கூட்டு துஆ பற்றியதாக இருப்பதனால் இரண்டுக்கும் ஒரே பதில் பொருத்தமாக இருக்கும்.

வணக்க வழிபாடுகளைப் பற்றிய இஸ்லாத்தின் அடிப்படை என்னவெனில், எந்தவொரு வணக்கமும் அல்லாஹ்விடமிருந்து வஹி மூலம் நபியவர்களுக்கு அறிவித்துக் கொடுக்கப்பட்டதாகும். எனவே, சொல் சார்ந்த வணக்கமாயினும் செயல் சார்ந்த வணக்கமாயினும் அதில் ஏதாவது ஒன்றை கூட்டவோ, குறைக்கவோ, இடைச்செருகல் செய்யவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. நபியவர்கள் கூட அல்லாஹ்விடமிருந்து பெற்றுத்தான் வணக்க வழிபாடுகள் அனைத்தையும் தன் சமூகத்துக்கு அறிமுகப்படுத்தினார்களேயன்றி, சுயமாக தன் விருப்பப் பிரகாரம் கூட்டல், குறைத்தல் செய்வதற்கு அல்லாஹ் நபிகளாருக்கும் அதிகாரம் வழங்கவில்லை. இதனால்தான் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்: 'நபியவர்கள் வஹியாக அருளப்படுவதைத் தவிர தன் மனோ இச்சைப் பிரகாரம் எதையும் பேசுவதில்லை' (53 : 3, 4). ஒரு முஸ்லிம் எந்தவொரு வணக்கத்தை நிறைவேற்றுவதற்கு முன்பும் இந்த அடிப்படை விதியை மனதில் ஆழமாகப் பதித்துக்கொள்ள வேண்டும்.

அல்லாஹ் விதித்த வணக்கங்களுள் தலை போன்றது தொழுகையாகும். நபியவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற பின் சுமார் 10 வருடங்கள் தனது மஸ்ஜிதுந் நபவியில் ஸஹாபாக்களை மஃமூம்களாகக் கொண்டு ஐவேளைத் தொழுகைகள், ஜும்ஆத் தொழுகை, கிரகணத் தொழுகை போன்றவற்றையும் மதீனாவிலுள்ள திறந்த மைதானம் ஒன்றில் பெருநாள் தொழுகைகளையும் நடாத்தியிருக்கிறார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தொழுகை முடிந்த பின் நபியவர்கள் கூட்டு துஆ ஓதியதுமில்லை, ஸஹாபாக்கள் ஆமீன் கூறியதுமில்லை. துஆ கேட்டால் உடனே அங்கீகரிக்கப்படுகின்ற உயர்ந்த தகுதியைக் கொண்டிருந்த நபியவர்களே கூட்டு துஆ கேட்கவில்லை எனும் போது, அந்த நபியைப் பின்பற்ற வேண்டிய நாம் அவர்கள் அறவே செய்யாத ஒரு செயலை எவ்வாறு செய்ய முடியும்? அதே வேளை, முஆத் இப்னு ஜபல் றழியல்லாஹு^அன்ஹு^போன்ற சில ஸஹாபாக்களுக்கு தொழுகைக்கு பின் தனியாக கேட்பதற்கென்று சில துஆக்களையும் நபியவர்கள் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். எனவே, தொழுகைக்கு பின் தனித்தனியாக ஒவ்வொருவரும் துஆ கேட்க வேண்டுமேயன்றி, இமாம் துஆ ஓத மற்றவர்கள் ஆமீன் சொல்லுகின்ற கூட்டு துஆ என்பது இஸ்லாத்தில் இல்லாத பித்அத்தான செயலாகும் என்பது கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

ஜும்ஆப் பிரசங்கத்தின் போது மழை வேண்டிப் பிரார்த்திப்பதற்காக நபியவர்கள் பன்மையான வாசக அமைப்பில் துஆ கேட்டிருக்கிறார்கள். ஒரு தடவை நபியவர்கள் ஜும்ஆப் பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருக்கும் போது தமக்கு மழை வேண்டிப் பிரார்த்திக்குமாறு ஒரு ஸஹாபி கோரிய போது நபியவர்கள் தமது இரு கைகளையும் உயர்த்தி 'யாஅல்லாஹ் எங்களுக்கு மழை பொழிவிப்பாயாக' என்று பிரார்தித்தார்கள். ஸஹாபாக்களும் தமது கைகளை உயர்த்திப் பிரார்த்தித்தாரகள். அடுத்த வாரம் அதே ஸஹாபி வந்து, ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருந்த நபியிடம் மழையை நிறுத்த துஆ கேட்க கோரிய போது நபியவர்கள் 'யாஅல்லாஹ் இம்மழையை எங்களை விட்டும் திருப்பிவிடுவாயாக' என்ற துஆவை கேட்டார்கள் (புஹாரி). எனவே இதற்கேற்ப ஜும்ஆப் பிரசங்கத்தின் போது பன்மையான வாசகங்களைப் பயன்படுத்தி துஆ செய்ய முடியும்.

இதே வேளை நமது பகுதிகளில் செய்யப்படுவது போன்று திருமணம், ஜனாஸா, பொது நிகழ்வுகள் ஆகியவற்றின் போது நபியவர்கள் தமது வாழ்நாளில் கூட்டு துஆ ஓதவில்லை என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இதை சற்று விரிவாக நோக்குவோம்.

நபியவர்கள் தனது தோழர்களின் திருமணத்திற்குச் சென்றால் 'பாரகல்லாஹு^லக வபாறக அலைக வஜமஅ பைனகுமா பீ கைர்' என்ற துஆவை மணமகனைப் பார்த்து தனியாகத்தான் ஓதுவார்கள். அதை நாமும் மணமகனைப் பார்த்து கூறுமாறுதான் கட்டளையிட்டார்கள் (அபூதாவூத், திர்மிதி, இப்னு மாஜஹ்). ஒருபோதும் நபியவர்கள் இன்றிருப்பது போன்று மணமகனின் வீட்டில் ஒரு துஆ, மணமகளின் வீட்டில் ஒரு துஆ என்று கூட்டாக துஆ ஓதியதாகவோ ஸஹாபாக்கள் ஆமீன் கூறியதாகவோ

எந்தவொரு ஆதாரமும் இல்லை.

இவ்வாறே நபியவர்கள் பல ஜனாஸாக்களில் கலந்துகொண்டிருக்கிறார்கள். ஜனாஸாவை அடக்கம் செய்து முடித்த பின் நபியவர்களைச் சுற்றி ஸஹாபாக்கள் அமர்ந்துகொள்ள, அந்த இடத்தில் வைத்தே நபிகளார் சிறிய உபதேசம் ஒன்று நிகழ்த்துவார்கள். பின்னர் ஸஹாபாக்களை நோக்கி, '(அடக்கப்பட்டிருக்கும்) உங்கள் சகோதரருக்காக பாவமன்னிப்பு கோருங்கள்' என்று கூறுவார்கள் (அபூதாவூத்). ஸஹாபாக்கள் தனித்தனியாக அந்த ஜனாஸாவுக்காக பிரார்த்தித்துவிட்டு கலைந்து செல்வார்கள். எனவே, ஜனாஸா நல்லடக்கத்திலும் கூட்டு துஆ இல்லை என்பதையும் தனித்தனியாக துஆ கேட்பதற்கே ஆதாரம் இருக்கிறது என்பதையும் தெட்டத்தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

பொது நிகழ்வுகள் நடைபெறும் சபைகளிலும் நபியவர்கள் கூட்டு துஆ ஓதியதாக ஆதாரங்கள் இல்லை. ஏதேனும் சபைகளில் அமர்ந்திருந்தால் நபியவர்கள் 'யாஅல்லாஹ்! எனக்கு பாவ மன்னிப்பு வழங்குவாயாக, என்னை மன்னிப்பாயாக, நிச்சயமாக நீ மன்னிப்பவனும் இரக்கமுள்ளவனுமாவாய் என்ற கருத்திலமைந்த துஆவை அடிக்கடி ஓதிக்கொள்வார்கள்' (அபூதாவூத், இப்னுமாஜஹ்). இந்த துஆ ஒருமையான வாசக அமைப்பிலேயே இருக்கிறது (எனக்கு, என்னை) என்பதை அவதானிக்க வேண்டும். கூட்டு துஆ ஓதியிருந்தால் எங்களுக்கு, எங்களை என்று பன்மையான சொற்களை நபியவர்கள் பயன்படுத்தியிருப்பார்கள். அவ்வாறு பன்மைச் சொற்களைப் பயன்படுத்தவில்லை என்பதன் மூலம் சபைகளில் கூட்டு துஆ ஓதுவதற்கு ஆதாரம் இல்லை என்பது தெளிவாகிறது. இவ்வாறே நபியவர்களும் ஸஹாபாக்களும் சபைகள் முடிவடையும் போது ஒவ்வொருவரும் 'ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது...' என்று தொடங்கும் தஸ்பீஹை தனித்தனியாக ஓதிவிட்டே கலைந்துசெல்வார்கள். அந்த தஸ்பீஹும் ஒருமையான வாசக அமைப்பிலேயே அமைந்திருக்கிறது. நம்மவர்கள் செய்வது போன்று நபிகளார் கூட்டு துஆ ஓதவுமில்லை, ஸலவாத் பாடல் பாடவுமில்லை.

யுத்த களத்தில் கூட நபியவர்கள் தனியாகத்தான் துஆ செய்தார்கள். பத்ரு யுத்தம் நடைபெற்ற தினத்திலே எதிரிகளின் பெரும் படையினரை கண்ணுற்ற போது நபிகளார் கிப்லாவை நோக்கித் திரும்பி அல்லாஹ்விடம் தனியாகவே பிரார்த்தித்தார்கள் (முஸ்னத் அஹ்மத்).

துஆ என்பது அல்லாஹ்விடம் நாம் முன்வைக்கும் கோரிக்கையாகும். ஒவ்வொருவருக்கும் என்ன தேவைகள், பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை அவரவர்தான் நன்கறிவார்கள். எனவே அவரவர் தனித்தனியாக அல்லாஹ்விடம் கேட்கும் போதுதான் அந்த துஆவில் உயிரோட்டமும் உணர்வும் நிறைந்திருக்கும். நபியவர்களின் வழிமுறையே நாம் பின்பற்றுவதற்கு தகுந்த, உகந்த ஒரே வழிமுறையாகும். அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

## 3R, 6S செயற்றிட்டத்தில் ஏறாவூர் மட்/றஹ்மானியா மகாவித்தியாலயம் தேசிய ரீதியில் தேசிய சாதனையாளர் விருது

கடந்த 2011ஆம் ஆண்டு கல்வியமைச்சும் DFCC வங்கியும் இணைந்து நடாத்திய பாடசாலைகளுக்கிடையிலான உற்பத்தித் திறன் போட்டியில் மட்/றஹ்மானியா மகாவித்தியாலயம் சகல துறைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியதற்காக முதல்தர சிறந்த பாடசாலையாக அகில இலங்கை ரீதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இத்துடன் 6S நடைமுறைப்படுத்தப்படும் 30 பாடசாலைகளுள் முதல் பத்து நிலையை அடைந்த (Top Ten) பாடசாலையாகவும் மட்/றஹ்மானியா மகாவித்தியாலயம் அகில இலங்கை ரீதியில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இத்திட்டத்தில் தலைவர்களாக MBA சக்கூர் (அதிபர்), SM. அலியார் ஆகியோரும் இணைப்பாளராக A. றியாஸ் அவர்களும் தரவட்ட இணைப்பாளர்களாக SH. றிபாய்தீன், TM. கஸ்ஸாலி ஸாஹிப், K. நௌஷாத், MH. ஹனீபா ஆகியோரும் 1-5 வரையான வகுப்பாசிரியர்களும் ஏனைய இடைநிலை, உயர்தர ஆசிரியர்களும் பங்காற்றியுள்ளனர்.

**தகவல் : A. றியாஸ் ஆசிரியர்**


**மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:**

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர
சந்தியில் அமைந்துள்ள
**யூரோ போன் வேர்ல்ட்**
இல.17, பிரதான வீதி, ஏறாவூர்
Fax: 065 2240283

டயலொக் மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill)
இங்கே செலுத்த முடியும்.

மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை
(குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

CGS
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி திருத்துவது
சம்பந்தமான பிரச்சினையா?
[redacted]
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues
இன்றே அழையுங்கள்
0772300420

ஏறாவூரில்
COMPUTERS
& REPAIRING



## புனித உம்றா யாத்திரை
## அல்-அறபா ட்றவல்ஸ் அன்ட் டுவர்ஸ்

**எமது சேவையில் :**

- இரு வழி சஊதி அரேபிய விமான டிக்கட் மற்றும் வீஸா.
- இலங்கை முறைப்படியான உணவு, தேனீர் சேவைகள்.
- அனுபவம் வாய்ந்த உலமாக்களின் வழிகாட்டல்.
- மக்கா மதீனாவில் புனிதஸ்தலங்களை தரிசித்தல்.
- ஹரம் ஷரீபுக்கும் மஸ்ஜிதுன்-நபவிக்கும் அருகில் தங்குமிடம்

**குறிப்பு : பாஸ்போர்ட் ஏற்பாடுகள் செய்து தரப்படும்.**
**பயணம் : 10 நாட்கள்**
**காலம் : 05ம் மாத நடுப்பகுதி, றமழான் மாதம்**

விபரங்களுக்கு: **அஷ்ஷெய்க் எம் .ஐ. எம் வபா (கபூரி)**
0772384665-0773818616-0778088030
அலுவலகம்: **சேப் வே புட் சிட்டி (Safeway Food City), 12, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர் 03**

**CGS**
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94772300420, +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணணி தகமைகளை **CGS** உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

### CGS இன் கணணி கற்கை நெறிகள்

- **Diploma in Personal Computer Based Application Packages**
- **Diploma in Computer Hardware**
- **Diploma in Computer Networking & Administration**
- **Professional Diploma in AutoCAD, MEP and Architecture**
- **Computer for Kids**

தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0772300420

ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஏழு கேள்விகள்

1. தொலைக்காட்சி நாடகங்கள், படங்கள் பார்ப்பதன் மூலம் ஏற்படும் சமூகத் தீமைகள் இரண்டு தருக.
2. இலங்கைக்கு எதிரான பிரேரணை அண்மையில் எந்த நகரில் நடைபெற்ற மாநாட்டில் கொண்டுவரப்பட்டது?
3. ஸுஜூதிலே ஓதப்படுகின்ற 'ஸுப்ஹான றப்பியல் அ.்லா' என்பதன் பொருள் யாது?
4. தக்பீருக்காக கைகளை உயர்த்தும் போது இரு கை விரல்களையும் எவ்வாறு வைத்திருக்க வேண்டும்?
5. ஜனாஸாவைக் குளிப்பாட்டும் போது எந்தப் பக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்?
6. சபைகள் முடிவடையும் போது ஓத வேண்டிய தஸ்பீஹை எழுதுக.
7. அண்மையில் அமெரிக்க இராணுவ வீரன் ஒருவன் அல்குர்ஆன் பிரதியை எரித்த நிகழ்வு எந்நாட்டில் நடைபெற்றது?

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **14.04.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு கொண்டு சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிடப்படமாட்டாது.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**1ம் இடம் : AKF. பர்ஸானா, 1ம் குறுக்கு வீதி, மிச்நகர், ஏறாவூர்**

**2ம் இடம் : AL. சுக்ரன், புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர் 06**

**3ம் இடம் : IF. ஜுஹ்ஹி, புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர் 06**

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. MIF. மஹ்பூபா, ஓடாவியார் வீதி, ஏறாவூர் 02
2. ALSM. ஜெஸீல், புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர் 06
3. MAF. பஷீறா, பெண் பாடசாலை வீதி, ஏறாவூர் 03A
4. MS. அன்பஸ், பெண் பாடசாலை வீதி, ஏறாவூர் 03A
5. IF. ஜஹ்ஹானி, புளியடி குறுக்கு வீதி, ஏறாவூர் 06

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. ஆரம்ப ஸப்புகளை பூரணப்படுத்தி நெருக்கமாக நிற்றல்
2. வாஹித் ஹஸன்
3. நாத்திகம்
4. கலிமா
5. 780 kg
6. 55
7. 64வது

**தமிழ் மொழியில் இஸ்லாமிய இணையத்தளங்கள்**

www.tamililquran.com
www.srilankamoors.com
www.islamkalvi.com
www.dharulathar.com
www.onlinepj.com
www.eravurnet.tk